www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் பருவத் தேர்வு - 2022

## (தொகுத்தறி மதிப்பீடு)

வகுப்பு : 5 சமூகவியல் நேரம் : 2.00 மணி

மதிப்பெண்கள் : 60

பெயர் : ................................................ பிரிவு .................. எண் ........................

**1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :** 10

1. திருமலை நாயக்கர் மஹால் ________________ யில் அமைந்துள்ளது.
   அ) சேலம் ஆ) திருமலை இ) மதுரை
2. ________________ நிலத்தடி நீரின் நிலை மற்றும் தன்மையைக் கண்காணிக்கிறது.
   அ) மத்திய நிலத்தடி நீர் ஆ) மெட்ரோ நீர் வாரியம் இ) யூனியன் குடிநீர் வாரியம்
3. ________________ குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வியின் முக்கியத்துவத்தை விவரிக்கிறது.
   அ) எழுத்தறிவு உரிமைச்சட்டம் ஆ) கல்வி உரிமைச்சட்டம் இ) பள்ளி உரிமைச்சட்டம்
4. ________________ கோட்டை விஜயநகர மன்னர்களால் கட்டப்பட்டது.
   அ) உதயகிரி ஆ) வேலூர் இ) செஞ்சி
5. ________________ வேளாண்மை என்பது பயிர்களுடன் விலங்குகளை வளர்ப்பதைக் குறிக்கிறது. அ) வணிக ஆ) கலப்பு பொருளாதார இ) தன்னிறைவு
6. கல்வியை மேம்படுத்துவதற்காக இந்திய அரசு ________________ வடிவமைத்துள்ளது.
   அ) தேசிய கல்விக் கொள்கை ஆ) தொடக்கக் கல்வி தொடர்பான தேசியக் கொள்கை
   இ) எழுத்தறிவுக்கான தேசியக் கொள்கை
7. ________________ என்பது உணவு உற்பத்திக்காக தாவரங்களை வளர்ப்பதாகும்.
   அ) நீர்ப்பாசனம் ஆ) வேளாண்மை இ) அகழ்வாராய்ச்சி
8. மிகவும் மலிவான பாசனமுறை ________________
   அ) கால்வாய்ப்பாசனம் ஆ) சொட்டுநீர்ப்பாசனம் இ) கிணற்று நீர்ப்பாசனம்
9. எழுத்தறிவு கல்வியின் முடிவு அல்ல என்றவர் ________________
   அ) மகாத்மா காந்தி ஆ) ஜவஹர்லால் நேரு இ) சுவாமி விவேகானந்தர்
10. இந்தியாவில் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட முதல் கோட்டை ________________
    அ) வேலூர்கோட்டை ஆ) புனித ஜார்ஜ் கோட்டை இ) செஞ்சிக்கோட்டை

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக :** 10

1. பத்மநாபபுரம் அரண்மனை ________________ அமைந்துள்ளது.
2. திண்டுக்கல் கோட்டை மதுரை ________________ களால் கட்டப்பட்டது.
3. இலவச மதிய உணவுத்திட்டம் ________________ என்பவரால் முதன்முதலில் செயல்படுத்தப்பட்டது.
4. கல்வி ________________ ளை நீக்குகிறது.
5. இந்திய பசுமை புரட்சியின் தந்தை ________________
6. ________________ இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும்.
7. தரங்கம்பாடி கோட்டை தமிழ்நாட்டின் ________________ கரையில் அமைந்துள்ளது.
8. பழமையான வரலாற்று நூலகங்களில் ஒன்று ________________
9. கல்வி என்பது மனிதனுள் ஏற்கனவே இருக்கும் முழுமையின் வெளிப்பாடு எனக் கூறியவர் ________________
10. இந்தியா ஓர் ________________ நாடு.

**3. பொருத்துக :** 5

| | | | | |
|---|---|---|---|---|
| 1. தமுக்கம் அரண்மனை | - | அ) பண்டைய இந்திய கல்விமுறை | (1 - | ) |
| 2. கிணற்று நீர்ப்பாசனம் | - | ஆ) மாணவர் | (2 - | ) |
| 3. குருகுலம் | - | இ) ஜூலை 15 | (3 - | ) |
| 4. ஷிஷ்யா | - | ஈ) மதுரை | (4 - | ) |
| 5. கல்வி வளர்ச்சி நாள் | - | உ) பழமையான முறை | (5 - | ) |

**4. சரியா, தவறா என எழுதுக :** 5

1. புனித ஜார்ஜ கோட்டையில் தமிழக சட்டமன்றம் செயல்படுகிறது. ( )
2. தோட்டப்பயிருக்கு பலாப்பழம் ஓர் எடுத்துக்காட்டாகும். ( )
3. சொட்டுநீர் பாசனத்தில் நீர் ஆவியாதல் குறைகிறது. ( )
4. இடைத்தரகர்களை ஏற்படுத்துவது உழவர்சந்தை. ( )
5. ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி கிடைக்க உரிமை உண்டு. ( )

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

5. சுருக்கமான விடையளி : 18

1. தரங்கம்பாடி கோட்டையை பற்றி சிறு குறிப்பு வரைக.

2. வேளாண்மையின் வகைகளைக் கூறு.

3. அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் பங்கு என்ன ?

4. திருமலை நாயக்கர் அரண்மனை குறித்து சிறு குறிப்பு வரைக.

5. பசுமைப் புரட்சி என்றால் என்ன ?

6. தேசிய கல்விக் கொள்கை பற்றி சிறு குறிப்பு வரைக.

6. விரிவான விடையளி : 12

1. கல்வி உரிமைச்சட்டம் பற்றி விரிவாக எழுதுக.

2. வேலூர்க்கோட்டைக்குள் காணப்படும் கட்டடங்கள் மற்றும் மஹால்கள் யாவை ?

Padasalai.Net